**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செய்யூர்</u>**

**<u>அசல் வழக்கு எண்.19/2020</u>**

**<u>(DW2)</u>**

| | | |
|---|---|---|
| **பெயர்.திரு.பழனி** | த/பெ.(அ)க/பெ.கோவிந்தசாமி | நாள் **22.08.2024** |

**<u>பி.வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க சம்மன் எதாவது கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. என்னை இந்த நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரதராஜ் என்பவர் அழைத்து வந்தார். இவ்வழக்கை ஆதிமூலம் என்பவர் வரதராஜன் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வாதி இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் வரதராஜன் நிலத்தை ஆறுமுகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி அதற்கு என்ன பதில் கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் அது அவர் இடம் என்றும் ஆறுமுகத்திற்கு அந்த இடத்தை கொடுக்க முடியாது என்றும் பதில் கொடுத்துள்ளார்.

2. 1 முதல் 4 வரையான பிரதிவாதிகள் யார் என்றால் வரதராஜன், ராமலிங்கம், பாலாஜி மற்றும் ஆனந்தன் ஆவார்கள். வழக்கு சொத்து எந்த வகை நிலத்தை சார்ந்தது என்றால் கிராமநத்தம் வீட்டு மனை ஆகும். எந்த வருவாய் ஆவணங்களை பார்த்து பிரதிவாதிகள் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்று நான் முடிவுக்கு வந்தேன் என்றால் பட்டா வரதராஜன் பெயரில் உள்ளது மேலும் அவர் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார். பட்டா எண்.1291 ஆகும். நிலத்தின் விஸ்தீரணம் 3-1/2 செண்ட் ஆகும். எந்த வருடம் பட்டா வழங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அது நினைவில்லை.

3. பட்டாவை நான் கணினியில் பார்த்துள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எந்த வருவாய் ஆவணங்களை பார்க்காமல் பிரதிவாதிக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் 180 சதுரஅடிக்கு நான்கு பக்க ஜக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும். வடக்கில் ரோடு, தெற்கு மாசிலாமணி மற்றும் ஆறுமுகம் இருவருக்கும் சேர்ந்த வீடு. மேற்கில் செந்தில் வீடு, கிழக்கில் ரோடு உள்ளது.

4. வாதி எத்தனை அயிட்ட சொத்திற்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஒரு இன சொத்துக்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் தாவா கிராமத்தை சேர்ந்தவர் கிடையாது என்றால் சரிதான். பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர். ஆனால் இரண்டிற்கும் ஒரே பஞ்சாயத்து ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் வரதராஜன் பாட்டனாரும் 50 வருடத்திற்கு மேல் தாவா சொத்தை அனுபவித்ததாக சொல்லப்படும் நிலையில் வரதராஜன் பாட்டனார் பெயர் என்ன என்றால் வைத்தியநாதன் ஆகும். அவர் பெயரில் எந்த வருவாய் ஆவணத்தை பார்த்துள்ளேன் என்றால் அவர் பெயரில் பட்டா கொடுத்துள்ளார்கள். அந்த பட்டா எண் மற்றும் வருடம் தெரியுமா என்றால் நினைவில்லை. அந்த பட்டாவை நான் பார்க்கவில்லை.

5. வரதராஜனின் இடத்திற்கு தெற்கு பக்கம் தான் வாதியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். வரதராஜன் சொத்து வேறு, வழக்கு சொத்து வேறு என்றால் சரிதான். வரதராஜன் பாட்டனார் தாவா சொத்தை அனுபவித்தார் என்று வருவாய் ஆவணங்களை பார்க்காமல் நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. வரதராஜனின் சகோதரர்கள் பெயர்கள் சபாபதி மற்றும் ராஜமாணிக்கம் ஆகும். சபாபதி மற்றும் ராஜமாணிக்கம் சேர்ந்து வரதராஜனுக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் எந்த தேதி மாதத்தில் கிரையம் கொடுத்தார்கள் என்றால் 2000 வருடம் கிரையம் கொடுத்தார்கள். தேதி, மாதம் தெரியாது. சுமார் 2,00,000/- ரூபாய்க்கு கிரையம் கொடுத்தார்கள். நான் அப்போது உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். ஆனால் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை. செய்யூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் செய்தார்கள்.

7. தாவா சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். சுமார் 30 வருடங்களாக தாவா சொத்தை நான் பார்த்துள்ளேன். தாவா பி அட்டவணை சொத்தை நான் முதலில் பார்த்தேன். வரதராஜன் பி அட்டவணை சொத்தில் தான் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார். எனக்கு தாவா சொத்தே என்னவென்று தெரியாது என்றாலும் நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. வாதிக்கு சொந்த பூர்வீகம் என்னவென்றால் முட்டூர் கிராமம் ஆகும். அது திண்டிவனம் அருகே உள்ளது. முதல் வாதி கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால்சரிதான். அவர் யாரிடமிருந்து எவ்வளவு ரூபாய்க்கு எந்த தேதியில் கிரையம் பெற்றார் என்றால் ஷீலாதேவியிடமிருந்து 2,50,000/- ரூபாய்க்கு கிரையம் பெற்றார்.. எந்த தேதி, மாதம், வருடம் எனக்கு சரியாக நினைவில்லை.

9. வாசா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் கண்ட ஜக்குபந்தியில் சர்வே எண்.762/2 - 1-3/4 செண்ட்டுக்கு ஜக்குபந்தி கடை வீதிக்கு செல்லும் தார்ரோடுக்கு மேற்கு, வரதராஜன் வீட்டுக்கு தெற்கு, மாசிலாமணி ஆசிரியர் வீட்டுக்கு வடக்கு, வேலாயுதம் வீட்டிற்கு கிழக்கு என்று கண்டுள்ள சொத்தை தான் வாதி ஆறுமுகம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அந்த சொத்தை தான் வாங்கியுள்ளார். ஆனால் பத்திரத்தில் ஜக்குபந்தி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. வரதராஜன் வீட்டிற்கு தெற்கில் தான் ஆறுமுகம் வீடு உள்ளதா என்றால் உள்ளது. அது சரியான ஜக்குபந்தி என்றால் சரிதான்.

10. தாவா அ அட்டவணை சொத்திற்கு எந்த திசையில் தாவா பி அட்டவணை சொத்து உள்ளது என்றால் வடக்கில் உள்ளது. எனக்கு தாவா சொத்து விவரமே தெரியாது என்றாலும் பிரதிவாதிக்கு பவ்வியப்பட்டுபொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. பி.வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள சொத்து விவரத்திலும் ஜக்குபந்தியில் ஆறுமுகம் வீட்டிற்கு வடக்கில் தான் வரதராஜன் வீடு உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கு பக்கம்உள்ள கழிவறையோ, வாழைமரமும் மூன்றாம் நபருக்கு தெரிய வாய்ப்பில்லை என்றாலும் அதனால் எனக்கும் அது தெரிய வாய்ப்பில்லை என்றாலும் பிரதிவாதி சொன்னதற்கிணங்க அவருக்குஅதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா அ அட்டவணை சொத்து தாவா பி அட்டவணை சொத்தின் ஒரு பகுதி என்றாலும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் அது தனித்தனி சொத்து அல்ல என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் பி அட்டவணை பிரதிவாதிகளின் அனுபவத்தில் கிடையாது என்றாலும் பிரதிவாதிக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

மறுவிசாரணை, இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.N.Preethi
DM Cum JM
Cheyyur